ஸ்ரீ ஹரி:

# மதுரமுரளி

தனி பிரதி Rs 15/-
ஆண்டு சந்தா Rs 180/-

மார்ச் 2017

வேணு 22; கானம் 8



Delivered by India Post www.indiapost.gov.in

மஹாரண்யம் ஸ்ரீ ஸ்ரீ முரளீதர ஸ்வாமிஜி அவர்கள்
அருளாசியுடன் வெளிவரும் தெய்வீக மாதப் பத்திரிகை

**ஸ்ரீ சுந்தர ஆஞ்சநேய ஸ்வாமி கோவில், பெங்களூரு**



# பொருளடக்கம்


5 மதுரமான மஹனீயர் - 252

8 பக்தர்களின் கேள்விகளுக்கு ஸ்ரீஸ்வாமிஜியின் பதில்கள்

9 ப்ரேமிக பவனம் உதயம் - 4

11 நாமமே நமது குருவாகும்போது - 2

13 பாலகர்களுக்கு ஒரு கதை

15 மாணவ மாணவியருக்கான கூட்டு பிரார்த்தனை

30 மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

32 செய்நன்றியறிதலே உய்யும் வழி

35 பாரம்பரிய பொக்கிஷங்கள்

37 சைதன்ய மஹாப்ரபு


40 படித்ததில் பிடித்தது



மதுரமுரளி

வேணு 22; கானம் 8


ஹரே ராம ஹரே ராம
ராம ராம ஹரே ஹரே
ஹரே க்ருஷ்ண ஹரே க்ருஷ்ண
க்ருஷ்ண க்ருஷ்ண ஹரே ஹரே



# மதுரகீதம்

## சந்த்ரபாகா நதிக்கரைக்கு

**ராகம்:** தேஷ்

**தாளம்:** ஆதி

### பல்லவி

**சந்த்ரபாகா நதிக்கரைக்கு சென்றிடுவாய் - மனமே!**
**ஆனந்தமாய் அதில் நீராடிடுவாய்**


### சரணம்

**சாதுக்கள் சரணத்தில் விழுந்து புரண்டு**
**பிறவிப் பயனை அடைந்திடுவாய் - மனமே!**

**வீதிக்கு வீதி வீட்டிற்கு வீடு**
**விட்டல் விட்டல் கர்ஜனை கேட்டிடுவாய் - மனமே!**

**ஆதியோடந்தம் ஆகிய தெய்வம்**
**விட்டல் ஒருவனே என்று உணர்ந்திடுவாய் - மனமே!**

---



<u>முன் அட்டை:</u>

ராதா கல்யாண உத்சவம், கடலூர்

<u>பின் அட்டை:</u>

Kavacham Web Portalன் துவக்க விழா, சென்னை

கடலூரில் புதுப்பாளையத்தில் உள்ள ஸ்ரீ ராஜகோபாலஸ்வாமி திருக்கோவில், இரட்டை பிள்ளையார் கோவில், மற்றும் பாபுராவ் தெருவில் உள்ள சங்கரமடம் இவைகளில் நிறைய உபந்யாசம், ராதாகல்யாணம் எல்லாம் நடக்கும். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சிறு வயதில் இவைகளில் நிறைய கலந்து கொண்டிருக்கின்றார்கள். ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்களின் சிஷ்யரான முரளீதர ஸர்மா என்பவர் கடலூர் ஸ்ரீ பலராம ஸாஸ்திரிகளுடைய குமாரர்தான். அதனால் ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் கடலூருக்கு பல முறை விஜயம் செய்துள்ளார்கள். பாபுராவ் தெருவில் சங்கரமடம் உள்ளது. இந்த சங்கரமடத்தை ஸ்ரீ துரைசாமி பாகவதர் என்பவர் பொறுப்பேற்று நடத்தி வந்தார். அவர் P.N.BANKல் வேலையும் பார்த்து வந்தார். ஸ்ரீவாஞ்சியம் ராமச்சந்திர பாகவதர், வெங்கட்ராம பாகவதர், கிருஷ்ணமூர்த்தி பாகவதர், பாலு பாகவதர், நடுக்காவேரி க்ருஷ்ணமூர்த்தி பாகவதர் போன்ற பாகவதர்களால் வருடாவருடம் ராதாகல்யாணம் அதிவிமர்சையாக நடக்கும். வருபவர்களுக்கு எல்லாம் அந்த தெருவில் உள்ள வீட்டின் முற்றங்களில் அன்னமிடப்படும். அது முடியவே மாலை ஆகிவிடும். அந்த வீதியில் பூவராகமூர்த்தி என்பவர் இருந்தார். அவர் தினமணி பத்திரிகை நிருபர். அவரும் இதில் கலந்துகொண்டு உதவிகள் செய்வார்.

# மதுரமான மஹினீயர்

Dr ஆ பாக்யநாதன்ஜி



ஸ்ரீ ஸ்ரீ அண்ணா அவர்கள் இந்த சங்கர மடத்தில் தொடர்ந்து பதினான்கு வருடங்கள் ஸ்ரீமத் பாகவத ஸப்தாஹம் நடத்தியுள்ளார்கள். கடலூரில் நீடாமங்கலம் கிருஷ்ணமூர்த்தி பாகவதர் வந்து கதை சொல்வார். கோவில் நிரம்பி வழியும். இன்று உலக பிரஸித்தியாக இருக்கும் கோபி பாகவதர் சிறு குழந்தையிலிருந்தே இந்த சங்கர மடத்தில் பஜனை செய்வார். அவரும் நவநீதக்ருஷ்ணன் என்பவரும் சேர்ந்து உபந்யாசங்கள் செய்வர். சில மாதங்களுக்கு முன்பாக கடலூரில் கூட்டு பிரார்த்தனைக்கு ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சென்றிருந்த பொழுது, இப்பொழுது சங்கர மடத்தை நிர்வகித்து வரும் ராஜா பாகவதர் சங்கரமடத்தில் உபந்யாசம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். 'நாம் சிறு வயதில் நிறைய ஸத்ஸங்கம் அனுபவித்த இடத்தில், உபந்யாசம் செய்ய வேண்டும்', என்று ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு ஒரு ஆசை. முதலில் ஏழு நாட்கள் பாகவதம் சொல்வதாக இருந்தது. நேரம் இல்லாததால் நான்கு நாட்கள் மட்டுமே பக்த விஜயம் சொல்ல முடிந்தது. வியாழன் அன்று நேரே கடலூர் வந்து கடில நதிக்கரையில் உள்ள ஸஞ்சீவி ஆஞ்சநேயரை தரிசனம் செய்துவிட்டு, மாலை உபந்யாசம் செய்தார்.

மறுநாள் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் திருநக்ஷத்திரமான ஸ்வாதியாக இருந்ததால் ராஜாபாகவதர் காலையில் ஒரு ஸத்ஸங்கம் ஏற்பாடு செய்திருந்தார். அன்று வெள்ளிகிழமை. மாலை தேவநாதன் ஸந்நிதிக்கு சென்றார். தாயார் புறப்பாடு. தாயார் அழகான முத்தங்கி புதியதாக சாற்றிக் கொண்டிருந்தாள். சிறு மடல் ஸேவித்துக்கொண்டும், வேத பாராயணத்துடன் தாயார் ஹம்ஸகதியில் புறப்பாடு கண்டு அருளினார்கள். பரம ரஸிகர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் அசைந்து அசைந்து தாயாரை அன்னநடை போட்டு, பத்தி உலாத்தினார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள், பக்கத்தில் இருந்த அஸ்வினிடம் "எனக்கு எல்லா திவ்யதேசத்து தாயாரும் தாயார்தான். இருந்தாலும் இது நான் பிறந்த ஊர். இந்த ஊர் தாயார்தான் என் சொந்த தாயார். தான் புதியதாக முத்தங்கி போட்டுக்கொண்டதை நான் பார்க்க வேண்டும் என்றுதான் என்னை இன்று அழைத்து அருள் செய்கின்றாள்" என்றார். அடுத்த நிமிடம் தாயாரை ஊஞ்சலில் எழுந்தருளச் செய்தார்கள். பக்கத்தில் இருந்த பட்டர் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களிடம், "தாயார் தான் புதியதாக முத்தங்கி சாற்றி கொண்டுள்ளதை தாங்கள் பார்க்க வேண்டும் என்றுதான் தங்களை இன்று இங்கு வரவழைத்துள்ளாள்" என்றார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு உடலில் ஒரு புலகாங்கிதமும் கண்களிலிருந்து நீரும் வந்தன. "பகவான் பேசவில்லை என்கிறார்களே! தாயார் எப்படி என்னுடன் பேசுகின்றாள் பார்" என்று கூறி

அதிசயப்பட்டார். தேவநாதன் ஸந்நிதி, ரங்கநாதன் ஸந்நிதி, ராமர் ஸந்நிதி ஸேவித்து உபந்யாசத்திற்கு வந்தார். மறுநாள் காலை தன்னுடைய வீட்டிற்கு பக்கத்தில் இருக்கும் செல்வ விநாயகருக்கு விசேஷமாக அபிஷேகம் செய்து பட்டும் சாற்றினார்.



பிறகு அங்கிருந்து ஸ்ரீ வில்வநாதீஸ்வரர் கோவில், மாரியம்மன் கோவில் சென்று கடலூர் O.Tயில் புதியதாக வாணிய சமூகத்தாரால் கட்டப்பட்டுள்ள புதிய ராமர் பஜனை மடத்திற்கு சென்றார். சனிக்கிழமை மாலை உபந்யாசம் முடிந்தபிறகு பக்கத்தில் உள்ள வேத பாடசாலைக்கு விஜயம் செய்தார். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை காலை ஸ்ரீ பாடலீஸ்வர் - பெரியநாயகி அம்பாளுக்கு விசேஷ அபிஷேகம் செய்து வஸ்திரங்கள் சாற்றினார்கள். அன்று அந்த சிவாச்சார்யர் பெரியநாயகி அம்பாளுக்கு அவ்வளவு அழகாக புடவையை சாற்றியிருந்தார்கள். பார்ப்பதற்கு ஒரு அழகான சுமங்கலி மடிசார் புடவையை பனிக்க அணிந்து அப்படியே உயிருடன் நிற்பது போல் தெரிந்தது. அடுத்து ராதா கல்யாணம். கூட்டமான கூட்டம். சட்டநாத பாகவதர் அப்படித்தான் பாடினார்கள். அவருடைய பஜனை எல்லோரையும் ஆனந்தப்படுத்தியது. வெகு நாட்களுக்குப் பிறகு நான்கு நாட்கள் கடலூரில் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்கள் சேர்ந்தாற்போல் தங்குவது இதுவே முதன்முறை. தினமும் நிறைய பக்தர்கள் ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களை தரிசனம் செய்து தங்கள் அன்பை பொழிந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிஜியின் பள்ளி அவர்களின் ஆசிரியர் திரு திருநாவுக்கரசு தினமும் வரவேற்பு மலர் படித்தார். திரு கார்த்திக், திரு நடேசன் இந்த நிகழ்ச்சிகள் இனிது நிறைவேற தொண்டாற்றினார்கள்.

# பக்தர்களின் கேள்விகளுக்கு
# ஸ்ரீ ஸ்வாமிஜியின் பதில்கள்

வைகுண்ட ஏகாதசி தினத்தன்று, நமது ப்ரேமிகவரதன் மதுரபுரி ஆசிரமத்தில் கருட வாகனத்தில் புறப்பாடு கண்டருளினார். அப்பொழுது ஒரு குழந்தை ஸ்ரீ ஸ்வாமிஜியின் அருகில் வந்து, "நாம் ஏன் ஸ்வாமிக்கு இவ்வாறு புறப்பாடு செய்ய வேண்டும்? இதுபோன்ற உற்சவங்கள் எதற்காகக் கொண்டாடப்படுகின்றன?" என்று கேட்டாள். மிக அழகாகப் புன்முறுவல் பூத்த ஸ்வாமிஜி, "தினமும் ஏராளமான பக்தர்கள் வந்து தங்கள் ப்ரார்த்தனைகளையும் குறைகளையும் நமது ப்ரேமிகவரதனிடம் சொல்லிக்கொண்டே இருக்கிறார்களே! எப்பொழுதும் அதையே ஸ்வாமியும் கேட்டுக்கொண்டிருக்கின்றாரே! அவருக்கு சிறிது நேரமாவது அதிலிருந்து ஓய்வும், ஒரு மாற்றமும் கொடுப்பதற்காகத்தான் இம்மாதிரி புறப்பாடுகளும் உற்சவங்களும் செய்யப்படுகின்றன" என்று கூறினார். அதைக் கேட்ட அந்தக்குழந்தை சிரித்துவிட, அவளோடு நாமும் சேர்ந்துகொண்டோம்.

# ப்ரேமிக பவனம் உதயம்

சில வருடங்கள் கழித்து ஜெயந்திக்கு செங்கல்பட்டிற்கு வேலை இட மாற்றம் (transfer) ஆயிற்று. கைங்கர்யங்களை செய்துகொண்டே வெகு தொலைவில் உள்ள அலுவலகத்திற்கும் சென்று வருவது மிகவும் சிரமமாக ஆகியது. பல நாட்களாக குருநாதரிடம், தான் VRS வாங்கிக்கொள்ள வேண்டுகோள் விடுத்திருந்து, உத்தரவு வராமல் காத்திருந்தார். இப்போது, குருநாதரே கூப்பிட்டு கருணையுடன் VRS வாங்கிக்கொள் என்று உத்தரவு கொடுத்து விட, மிகவும் சந்தோஷத்துடன் வேலையை ராஜினாமா செய்துவிட்டார். இனி, முழுவதுமாக கைங்கர்யத்திலும், ஸத்சங்கத்திலும், ஜப த்யானங்களிலும் தன்னை ஈடுபடுத்திக் கொள்ளலாமே என்ற ஆசைதான் அதற்கு முக்கிய காரணம்.

அவர் எண்ணப்படியே, பாகவத ராமாயண நித்ய பாராயணம், மஹாமந்திர ஜபம், கைங்கர்யங்கள், தன் பெண்ணுடன் ஸத்சங்கமாக பேசுவது என்று நேரத்தை வீண்பொழுது போக்காமல் குருநாதருக்கு பிடித்தபடி வாழ்க்கையை நடத்தி வந்தார். குருநாதரிடம், தன்னுடைய ஆன்மீக அனுபவத்தை எல்லாம் பல அழகழகான கீர்த்தனங்களாக எழுதி, ராகம் போட்டு, எல்லோருக்கும் சொல்லிக் கொடுத்து மகிழ்வார். தினமும் குருநாதருக்குப் பலவிதமாக சமைத்துக் கொடுத்து, அவர் சாப்பிடுவதில் பேரானந்தம் அடைவார். குருநாதர், அருகிலுள்ள திவ்யதேசங்களுக்கு அழைத்துச் செல்லும்போது, காலையில் சீக்கிரமே எழுந்து, அனைத்து பக்தர்களுக்கும் வழிக்கு வேண்டிய ஆகாரம் தயார் செய்து எடுத்துக் கொள்வார். குருநாதருடன் வெளியூர் திவ்யதேசங்களுக்கு யாத்திரை செல்லும் பொழுதுகூட, ஏதோ கூட சென்றோம் என்று இல்லாமல், தன்னால் முடிந்த வரை அங்கும் ஏதாவது கைங்கர்யம் செய்து கொண்டே உற்சாகம் குறையாமல் கலந்து கொள்வார்.

ஒருசமயம், பிருந்தாவன யாத்திரையின்போது க்ருஷ்ணனுக்கு “ராஜ்போக்” அதாவது 56 வகைகள் சமைத்து நிவேதனம் செய்ய வேண்டும் என்று ஆசைப்பட்டார் ஸ்வாமிஜி. உடனே, காலையில் ஆரம்பித்து சாயந்திரத்திற்குள் தனது தோழிகள் சில பேருடன் சேர்ந்து அந்த 56 வகைகளை சமைத்துவிட்டார். எல்லா பக்தர்களும் அதிசயித்தனர். ஆனால், குருநாதர் ஒன்று செய்ய சொன்னால் அதை செய்ய வைப்பதும் அவரே என்று ஜெயந்தி நினைத்துக்கொண்டார்.

ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் பூஜா மூர்த்தியான ப்ரேமிக வரதனுக்கும் மாதுரி ஸகீக்கும் தினமும் அணிவிப்பதற்கு புதிதான பட்டு வஸ்திரங்களை தைத்துக் கொடுப்பார். அது சம்பந்தமான ஒரு ரசமான அனுபவம். ஒரு சமயம், ‘அம்மாளு அம்மாள்’ என்ற கும்பகோணத்தைச் சேர்ந்த ஒரு பெரிய க்ருஷ்ண பக்தை, ப்ரேமிக பவனம் வந்திருந்தார். அப்போது அவர்கள், ப்ரேமிக வரதனை தரிசித்ததும் அவன் மீது ஒரு பாட்டு கவனம் ஆயிற்று. அதில், “கண்ணா! நீ யசோதையிடம் அடம் பிடித்து, கெட்டி ஜரிகை போட்ட பட்டு வஸ்திரம் வேண்டும் என்று கேட்டு தினமும் அதை உடுத்திக் கொள்கின்றாய்!” என்று பாடினார். அதைக் கேட்ட நம் குருநாதர், “ப்ரேமிக வரதனின் சங்கல்பம்தான் அப்படி பாட்டாக கவனம் ஆயிருக்கின்றது. ஆகையால் இனி, அவனுக்கு நாம் தினமும் பட்டு ஜரிகையுடன், புது புது பட்டு வஸ்திரம் அணிவிப்போம்” என்று கூறினார். அது முதல், அந்தக் கைங்கர்யத்தையும் ஆசையாக ஜெயந்தி செய்து வந்தார்.

ப்ரேமை தொடரும்...

# நாமமே நமது குருவாகும்போது....

விக்னேஷ் சுந்தரராமன்

...பல நாடுகளில் நிலவும் சூழ்நிலைகளை கவனித்துப்பார்த்தால் அங்கே பல சட்ட திட்டங்கள் உள்ளன. அவர்களால் அவர்கள் விரும்பும் வேலைக்குச் செல்ல முடிவதில்லை. பேச்சுரிமை இல்லை. அவர்கள் விரும்புவதுபோல் உடை அணிய இயலாது. இதுபோல் பலவற்றை அடுக்கிக்கொண்டே போகலாம். இந்தியா போன்ற ஒரு சுதந்திர நாட்டில், மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் பிரதிநிதிகளைக்கொண்டு நடக்கும் ஜனநாயக ஆட்சி நடந்து கொண்டிருக்கும் நாட்டில், நமது எண்ணங்களை யாரும் கட்டுப்படுத்தாத நிலையில், நமக்கு நல்லது என்று மிக நன்றாகத் தெரிந்த ஒரு விஷயத்தை நம்மால் ஏன் செய்யமுடியவில்லை? தொடர்ச்சியான ஒரு நாம ஜபத்தை மேற்கொள்ளாததன் காரணம்தான் என்ன?

ஒரு சமூக சீர்கேடு நிகழும்போதோ அல்லது அரசியல் ஏற்றத்தாழ்வுகளின்போதோ இவையெல்லாம் நிலையில்லை என்று நன்றாக நம் மனதிற்குத் தெரிந்தும், நாம் நாமஜபம் செய்யாமல், அந்த நிகழ்வுகளைப்பற்றி எண்ணிக்கொண்டும் பேசிக்கொண்டும் நேரத்தை வீணடிக்கிறோம். நல்லதோ தீயதோ எதுவுமே நிலையில்லாதது என்று நமக்கு நன்றாகத் தெரியும். நமக்கு ஏற்புள்ள ஒரு விஷயம் மற்றொருவருக்கு ஏற்பில்லாமல் போகலாம். உலகில் ஒரு சில இடங்களில் அனுமதிக்கப்படும் சில விஷயங்கள் மற்ற நாடுகளில் தடை செய்யப்பட்டிருக்கலாம். இந்த நிலையற்ற தன்மையைக் கருத்தில் கொண்டு நாம் நமக்கென நமது குரு காட்டிய வழியில் நம் கவனத்தை முழுமையாகச் செலுத்தவேண்டும்.

ஒரு கூலித்தொழிலாளி மிகச் சொற்பமான ஒரு கூலிக்காக வேகாத வெயிலில் வேலை செய்வதையும், புற்றுநோய் பாதிப்பினால் ஒரு சிலருக்குக் காதுகள், கால்கள் முதலிய உடல் உறுப்புகள் நீக்கப்படுவதையும், சிலர் பொறுக்கமுடியாத வலியினால் துன்பப்படுவதையும் நாம் பார்க்கிறோமல்லவா?

நமது நெருங்கிய நண்பரின் தந்தையைப் பற்றி ஒரு ஜோசியர், அவர் நீண்ட காலம் வாழ்வார் என்று கணித்துச் சொல்லியிருந்தபோதும், திடீர் மாரடைப்பால் 50 வயதிற்குள்ளாகவே காலமாவதையும் பார்க்கிறோம். சிறிது நேரம் கண்ணீர் சிந்திவிட்டு, சிலபல ஆறுதல் வார்த்தைகளைப் பேசிவிட்டு வந்துவிடுகிறோம்.

‘நாமம் சொல்லவேண்டுமா? ஆன்மீகப்பாதையா? அது கண்டிப்பாக அவசியம்தான், ஆனால் இந்த இளவயதில் அல்ல. நான் வேலையிலிருந்து ஓய்வு பெற்றபின்னர் ஆன்மீகப்பாதைக்கு வருவேன்’ என்றும் சிலர் சொல்வதுண்டு.

ஆனால், உள்மனதில் ஒரு குரல் கேட்கிறது. இறைவன் நமக்கு மிக அழகான, சந்தோஷமான வாழ்க்கையைத் தந்திருக்கிறான். ஆனால், நாம் தேவையற்ற விஷயங்களில் கவனம் செலுத்திக்கொண்டு நாமம் சொல்லாமல் இப்படிப் பொழுதை வீணடிக்கிறோமே! என்று எண்ணி, நாமம் சொல்லத் தொடங்குகின்றோம். நாமம் சொல்லத் தொடங்கி, சில மாதங்களில் நமக்கு இன்னும் கொஞ்சம் சீரான எண்ணங்கள் வரத் தொடங்குகின்றன. கொஞ்சம்போல் மன நிம்மதி கிடைக்கிறது. தூரத்திலிருந்து ஒரு சினிமாப் பாடல் கேட்கும்போது, நம்மை அறியாமல் உதடுகள் முணுமுணுக்கின்றன. சில நொடிகளிலேயே நமது கவனத்தை திருப்பி, அவையெல்லாம் அர்த்தமற்றவை என்றும், நாமம் சொல்வதில் கவனம் செலுத்தவேண்டும் என்றும் தோன்றுகிறது. இதுநாள் வரை நாம் மிகவும் ரசித்துப் பார்த்துக்கொண்டிருந்த தொலைக்காட்சி நிகழ்ச்சிகள், இசை நிகழ்ச்சிகள், இன்னும் பிற பொழுதுபோக்குகள் அனைத்தும் இப்போது மிகவும் அர்த்தமற்றவையாகத் தோன்ற ஆரம்பிக்கின்றன.

...தொடரும்

# பாலகர்களுக்கு ஒரு கதை

## நண்பனின் கல்வி

செல்வமும், கோபுவும் ஒரே பள்ளியில் படித்து வந்த நண்பர்கள். செல்வம், சுபாவத்திலேயே எவருடனும் இனிமையாக பேசமாட்டான். எப்பொழுதும் கடுமையான வார்த்தைகளை தான் உபயோகப்படுத்தி பேசுவான். சிடுசிடு என அவன் பேசுவதை பார்த்து அஞ்சி, யாருமே அவனிடம் மிக அளவாகத்தான் பேசுவார்கள். அவனுடைய நண்பன் கோபுவோ இதற்கு நேர்மாதிரி. எப்பொழுதும் அவன் அழகாகவும், இனிமையாகவும் பேசுவான். யார் கேட்டாலும், பொறுமையாகவும் தெளிவாகவும் பதிலளிப்பான். கோபுவிற்கு, செல்வத்தின் இந்த பழக்கம் வேதனையைத் தந்தது. பலமுறை செல்வத்திடம், "செல்வம், நீ ஏன் எல்லோரிடமும் படபடவென பொரிந்து தள்ளுகிறாய்? நிதானமாக இதமாக பதிலளிக்கலாமே" என்பான். அதற்கு செல்வம் கொஞ்சமும் தாமதிக்காமல், "நான் என்ன தவறு செய்கிறேன்? யார் எது கேட்டாலும், அதற்குத் தகுந்த பதிலைத் தானே கூறுகிறேன்?" என்று கடிந்துகொள்வான். கோபுவால் ஒன்றும் சொல்ல முடியாது. தினம் இப்படியே செல்லும்!

ஒருநாள், அவர்கள் இருவரும் படித்துக் கொண்டிருந்த பள்ளியின் ஆண்டு விழா வந்தது. அன்றைய தினம் பள்ளியில் பல கலை நிகழ்ச்சிகள் நடைபெற இருந்தன. கோபு, பள்ளிக்கு செல்வத்துடன் சேர்ந்து போகலாம் என்று அவன் வீட்டிற்கு வந்திருந்தான். அப்பொழுதுதான் செல்வம், அணிந்துகொள்ள ஆடையைத் தேர்வு செய்து கொண்டு இருந்தான். செல்வத்தின் உடைகள் அலமாரியில் இருந்தன. அவற்றில் மிக நன்றாக மடித்து வைக்கப்பட்டு இருந்ததில், அழகான, அழுக்கே இல்லாததாகப் பார்த்து தேர்ந்தெடுத்து அணிந்து கொள்ள ஆரம்பித்தான். அப்பொழுது கோபு, "செல்வம்! மற்ற உடைகளை எல்லாம் ஏன் நீ பார்க்கக் கூட இல்லையே? அவற்றில் என்ன குறை? அவை கிழிந்துள்ளனவா?" எனக் கேட்டான். "இல்லையே! அவை ஒன்றும்


கிழியவில்லையே!'' என பதில் சொன்ன செல்வத்தின் கவனமனைத்தும், அவன் அணிந்தவாறிருந்த ஆடையிலேயே இருந்தது. நிஜமாகவே அது நல்ல ஆடைதான்.

மீண்டும் கோபு, ''ஆடைகள் கிழியவில்லை எனில், ஏன் இந்த ஆடையை குறிப்பாக அணிகிறாய்?'' என்றான். உடனே செல்வம், ''இன்று ஆண்டு விழா அல்லவா! எல்லோரும் உற்சாகமாக இருப்பார்கள். என்னைப் பார்த்தவுடன் அந்த உற்சாகம் இன்னும் அதிகமாக வேண்டுமல்லவா? நான் துவைக்காமல் அழுக்காகவோ அல்லது மடிக்காததாகவோ ஒரு ஆடை அணிந்து சென்றால், என்னைப் பார்த்து முகம் சுளிப்பார்கள். அதை தவிர்க்கலாம்தானே? அதனால்தான் சிறிதும் அழுக்கில்லாத, நன்கு துவைத்து மடித்து வைத்திருக்கும் துணியை தேர்ந்தெடுத்து அணிகிறேன். சுத்தமான உடைகள் இருக்கையில், அழுக்கானதை அணியலாமா?'' என்றான்.

உடனே கோபுவின் முகம் பிரகாசமானது. ''செல்வம், நீ சொல்வது மிக சரிதான். இதையேதான், நானும் தினம் தினம் உன்னிடம் சொல்லிக்கொண்டு இருக்கின்றேன். நல்ல உடை அணிவது போலவே, நல்ல இனிமையான வார்த்தைகளைக் கொண்டு பேச முடியும் எனும்பொழுது, ஏன் முகத்தில் அடித்தாற் போன்ற கடுஞ்சொற்கள் உபயோகப்படுத்தி பேச வேண்டும்?'' என்றான்.

செல்வத்திற்கு 'சுரீர்' என உரைத்தது. கொஞ்சம் யோசித்தவன், ''ஆமாம் நண்பா! நீ சொல்வதும் சரி. நானும் என்னை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றிக் கொள்கிறேன்'' என்றவன், ''வா! இனிமையாக நண்பர்களுடன் பேசிக் கொண்டே செல்வோம்'' என்றான்!

இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்ப காய் கவர்ந்தற்று - குறள்





ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் 'நவயோகிகள் உபாக்யானம்' உபன்யாசத்திலிருந்து தொகுத்து வழங்கப்பட்டுள்ள புத்தகம்

விலை: Rs 100/-

கிடைக்கும் இடம்:
மதுரம் ஸ்டோர்ஸ்

தொலைபேசி எண்:
+91-44-24895400, +919442613710

# மாணவ மாணவியருக்கான கூட்டு பிரார்த்தனை

**ஸ்ரீ முரளி**

நம் ஸ்ரீ ஸத்குருநாதரின் பரம கிருபையால், பல பள்ளிகளில் மகாமந்திர கூட்டு பிரார்த்தனை செய்யக்கூடிய பாக்கியம் கிடைத்தது. கடந்த வருடம் ஆகஸ்ட் 2016 முதல் பிப்ரவரி 2017 வரை சுமார் 169 பள்ளிகளில் 87,140 (குறிப்பாக 10/12 வகுப்பு) மாணவ மாணவிகள் முன்னிலையில் 15 மாவட்டங்கள்/ 45 ஊர்கள்/ 36 கிராமங்களில், படிப்பில் சாதிக்க ஊக்கப்படுத்துதல் மற்றும் மகாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனையும் நடைபெற்றது. இந்த மாணவ மாணவிகளுக்கான கூட்டுப்ப்ரார்த்தனை பல பெரிய ஊர்கள் மட்டுமின்றி பல்வேறு கிராமங்களிலும் நடைபெற்றது. குறிப்பாக, கடலூர், காரைக்குடி, சென்னை, திருவள்ளூர், சோளிங்கர், திருத்தணி. அரக்கோணம், உடுமலைபேட்டை, திருநெல்வேலி, கடையநல்லூர், அம்பாசமுத்ரம், கல்லிடைகுறிச்சி, காஞ்சிபுரம், திருச்சி, மதுரை, தூத்துக்குடி, கோவில்பட்டி, வள்ளியூர், நாகர்கோயில், சங்கரன்கோயில், சிவகாசி, விளாம்பட்டி, சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், ராஜபாளையம், விருதுநகர், வத்தலகுண்டு, நிலகோட்டை, தேனீ, போடி, ஸ்ரீபெரும்புதூர், பூந்தண்டலம், சின்னசேலம், திட்டக்குடி, மங்களூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, குடியாத்தம் மற்றும் வேலூர் ஆகிய ஊர்களில் நடைபெற்றது. இதற்கான ஏற்பாடுகளை நம் குருநாதரின் கிருபையால் இயங்கி வரும் நாமத்வார் மற்றும் GOD ஸத்சங்க அன்பர்கள் சிறப்பாக செய்தனர்.

நாம் புதிதாக அணுகும் ஒவ்வொரு பள்ளியிலும், நம் ஸத்குருநாதரின் உபன்யாசத்தை முன்பே கேட்டிருந்த ஆசிரியரோ பள்ளி ஊழியரோ மகாமந்திரத்தை உச்சரிப்பவராகவோ, நம் ஸத்குருநாதரை நன்கு அறிந்தவர்களாகவோ தரிசிக்க ஆசை படுபவர்களாகவோ இருப்பர். ஒவ்வொரு வருடமும் மகாமந்திர கூட்டுப்ப்ரார்த்தனை நடந்த பல பள்ளிகளில், மாநில/மாவட்ட அளவில் மாணவ மாணவியர் சாதித்து வருகின்றனர் (உதாரணத்திற்கு) சென்ற வருடம் மாநில அளவில் மட்டும் 7 மாணவ மாணவிகள்: கோவில்பட்டி (பாலாஜி/அஷ்வின்/யாமினி), தருமபுரி (கலைப்ரியா/சிவசூர்யா), காரைக்குடி (வெங்கட்கார்த்திக்), ஸ்ரீபெரும்புதூர் (சூர்யமோகன்). பல பள்ளிகளும், மாணவ மாணவிகளும், ஆசிரியர்களும் கூட்டுப்ப்ரார்த்தனையினால் பெற்ற பலன்களை கடிதம் மூலமாகவும் கொடுத்துள்ளனர். சில பள்ளிகளில் இன்றும், வருடத்திற்கு ஒருநாள் (ஆண்டு தேர்வுக்கு முன்) அகண்ட நாமம் அனைத்து பள்ளி குழந்தைகளுடன் (LKGமுதல்-12thவரை) மற்றும் ஆசிரியர்களுடனும் சேர்ந்து செய்யப்படுகிறது.

பள்ளிகளில் செய்யப்படும் இந்த கூட்டுப்ப்ரார்த்தனையில், சமுதாய ஜாதி மத வேறுபாடுகளின்றி அனைத்து மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியர்களும் கலந்துகொண்டு பயனடைகின்றனர். நாமும் எந்த குறிப்பிட்ட தெய்வத்தையும் மதத்தையும் பற்றி பேசாமல், முடிவில் மட்டும் மகாமந்திரம் சொல்லி பிரார்த்தனை செய்கிறோம். உதாரணமாக ஒரு அனுபவத்தை குறிப்பிட வேண்டியுள்ளது. திருவள்ளூரில் ஒரு பள்ளியில் நிகழ்ச்சி முடிந்ததும், ஒரு +2 மாணவி (வேறு மதத்தை சேர்ந்த) எழுந்து பேச விரும்பி கூறும்போது, "நான் வேறு மதத்தை சேர்ந்தவள், உங்கள் தெய்வத்தை பற்றி கூறி பிரசாரம் செய்ய நீங்கள் வந்ததாக முதலில் நான் தவறாக கருதி, மனமின்றி கலந்துகொண்டேன். ஆனால் இந்த நிகழ்ச்சி தொடங்கி போகபோக, எங்களுக்கு இந்த வயதில் தெரிந்துகொள்ள வேண்டிய பல முக்கியமான விஷயங்களை மட்டுமே எடுத்துகூறிய விதம் (எந்த தெய்வம்/ மதத்தையும் குறிப்பிடாமல்) மிகவும் எனக்கு பிடித்தது. எந்த அளவிற்க்கு எனில், என்னை அறியாமலேயே முடிவில் நீங்கள் செய்த கூட்டுப்ப்ரார்த்தனையில் என்னுடைய நாக்கு இந்த மகாமந்திரத்தை உச்சரிக்கும் அளவிற்கு என்னை கவர்ந்தது".

மேலும் வரும்வருடங்களில், பல புதிய பள்ளிகளும், மாணவ மாணவியரும் மகாமந்திரம் உச்சரித்து நம் ப்ரேமிகவரதனுக்கு பிடித்தவர்களாக ஆவதற்கு ஸத்குருநாதரின் திருவடியில் பிரார்த்தனை செய்வோமாக.

love is eternal.....we build homes with love

rk

radha krishna real estates

**rajmani group of companies**

(property developers, builders and contractors)

we invite joint venture /outright proposals from owners

Contact 9840030711, email: rkre46@gmail.com

Website: http://www.rajmanibuilders.com



**Our Humble Pranams to the Lotus feet of His Holiness Sri Sri Muralidhara Swamiji**



**Gururam Consulting Private Ltd**

# ஸனாதன புதிர் – 94

## ஆத்ரேயன்

**கேள்விகள்**

1. அர்ஜுனனுக்கு சிவன் அளித்த அஸ்திரத்தின் பெயர் என்ன?
2. இந்ரதன்வா - இவருடைய பெற்றோர்கள் யார்?
3. உபமன்யு - இவர் எதில் சிறந்தவர்? தாய், தந்தையர் யார்? யாருக்கு சிவ ஸஹஸ்ர நாமத்தை உபதேசித்தார்?
4. ஊர்வசி - இவர் யார்? கணவன், புதல்வர்கள் பெயர் என்ன? இவர் யார் பிறப்பதற்கு காரணமாக இருந்தார்?
5. வசிஷ்டரின் புதல்வரான சக்தி, யாரால், எந்த வித்யையின் மூலம் அழிக்கப்பட்டார்?
6. விஸ்ரவா / விஸ்ரவஸ் இவருடைய மனைவிகளின் பெயர் என்ன?
7. குபேரனின் தாய், தந்தையர் பெயர் என்ன?
8. ராவணன் / கும்பகர்ணன் இவர்களின் பெற்றோர் யார்?
9. விபீஷணனின் தாய், தந்தையர் பெயர் என்ன?
10. கரன், சூர்ப்பணகா இவர்களின் பெற்றோர் யார்?

**“உனக்கு எப்பொழுது உற்சாகம் தேவைப் படுகின்றதோ, அப்பொழுது உன்னை நீயே உற்சாகப்படுத்திக்கொள். எப்பொழுது உனக்கு பாராட்டு தேவைப் படுகின்றதோ அப்பொழுது உன்னை நீயே பாராட்டிக் கொள். எப்பொழுது நீ மிகவும் தாழ்வு மனப்பான்மையுடன் கூழயவனா(ளா)க இருக்கின்றாயோ, அப்பொழுது உன்னை நீயே நேர்மறையான எண்ணங்களால் சரிபடுத்திக்கொள். எப்பொழுது நீ ஆறுதலை எதிர்பார்க்கின்றாயோ, அப்பொழுது உன்னை நீயே ஆறுதல் படுத்திக்கொள். பிறருடைய கனிவையும், அன்பையும் எப்பொழுது எதிர்பார்க்கின்றாயோ, அப்பொழுது அவைகளை நீயே உனக்கு அளித்துக்கொள். இவைகளைக் கூட பிறரிடமிருந்து எதிர்பார்க்காத தீரனாக இரு.**

**~ ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி**

## ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களின் உபன்யாசம் மற்றும் ராதா கல்யாண உத்ஸவம், கடலூர், 16-19 Feb 2017









**பகவான் யோகி ராம்சுரத்குமார்**
**ஆராதனை, அபயம்,**
**கூடுவாஞ்சேரி, 23 Feb 2017**

# சேங்கனூர் ஸ்ரீ ஸ்ரீனிவாஸ பெருமாள்














**மலேசியாவில் Dr பாக்யநாதன்ஜி அவர்களின் சத்சங்கங்கள், 23-29 Jan 2017**








**சிங்கப்பூரில் Dr பாக்யநாதன்ஜி அவர்களின் சத்சங்கங்கள் மற்றும் நாமத்வாரின் புதிய சொந்த கட்டிட திறப்பு விழா, 30 Jan - 6 Feb 2017**











ஸ்ரீ பூர்ணிமாஜியின் சத்சங்கங்கள்:
23-29 Jan 2017, ஸ்ரீமத் பாகவத சப்தாஹம், திருவனந்தபுரம்;
3-9 Feb 2017 ஸ்ரீ ராமானுஜர் வைபவம் உபன்யாசம், அண்ணாநகர் நாமத்வார்

Dr ஜனனியின் சத்சங்கங்கள்:
30 Jan-1 Feb கலியையும் பலி கொள்ளும் உபன்யாசம், சிவகாசி நாமத்வார்;
2-4 Feb மதுரகீதம் உபன்யாசம், தூத்துக்குடி நாமத்வார்












**Jan-Feb:** ஸ்ரீ முரளி அவர்களின் மாணவ மாணவியருக்கான கூட்டு பிரார்த்தனை: சிவகாசி, சாத்தூர், அருப்புக்கோட்டை, ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர், விருதுநகர், மதுரை, வத்தலகுண்டு, நிலக்கோட்டை, தேனீ, ஸ்ரீபெரும்புதூர், குன்றத்தூர், கள்ளக்குறிச்சி, சின்னசேலம், திட்டக்குடி, மண்கல்லூர், சிங்கப்பெருமாள் கோவில், மலைப்பேட்டு, குடியாத்தம், வெல்லூர் - 78 பள்ளிகள், 42000 மாணவ மாணவியர்கள்




**1-18 Feb:** பம்மல் ஸ்ரீ பாலாஜி அவர்களின் சத்சங்கங்கள்:
தூத்துக்குடி, பறக்கை, பார்வதிபுரம், வடிவீஸ்வரம், பேயோடு, கணபதியபுரம், சுசீந்திரம், பணகுடி, களக்காடு, பத்மநாபபுரம், திருச்சி, கோனார் சத்திரம்




**8-14 Feb:** ஸ்ரீ கேசவன் அவர்களின் உபன்யாசம் -
ஸ்ரீ ராமானுஜர் வைபவம், ஸ்ரீபெரும்புதூர் நாமத்வார்



**2-8 Feb: ஸ்ரீ ராமஸ்வாமி அவர்களின் தசமஸ்கந்தம் உபன்யாசம், சத்யமங்களம்**



**9-15 Feb: குமாரி காயத்ரி - குமாரி ப்ரியங்காவின் ஸ்ரீ க்ருஷ்ண லீலா உபன்யாசம், வேலூர்**











**11-17 Feb: குமாரி ஸ்ரீகன்யா - குமாரி ஷிவ்கன்யாவின் ஸ்ரீமத் பாகவதம் உபன்யாசம், சென்னை**





**1 Feb: ஸ்ரீ கல்யாணஸ்ரீனிவாச பெருமாள் பிரதிஷ்டா தினம், மஹாரண்யம்**










**28 Jan: இந்திய பாரம்பர்ய வினாவிடை போட்டி - புராநவா, மும்பை. விவேகானந்தா சொசைட்டி பள்ளி வெற்றி பெற்றனர். ஸ்ரீ ரேணுகா ராம்நாத் அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டார்.**

# பத்ர

# पत्र

## மாதம் ஒரு சம்ஸ்க்ருத வார்த்தை

ஸ்ரீ விஷ்ணுப்ரியா

'பத்ர' என்ற இந்த ஸமஸ்க்ருத வார்த்தைக்கு பல அர்த்தங்கள் உள்ளன. ப்ரஸித்தமாக பத்ரம் என்றால் கடிதம் என்பது எல்லோரும் அறிந்தது. தமிழில் கூட கடிதத்திற்கு பத்திரம் என்று சொல்வதுண்டு. அதனால்தான் 'பத்ராலயம்' என்றால் ஸமஸ்க்ருதத்தில் POST OFFICE என்று அர்த்தம்.

'பத்ர' என்றால் 'இலை' என்பது மற்றொரு அர்த்தம். பகவான் ஸ்ரீ க்ருஷ்ணன் பகவத் கீதையில் 'பத்ரம் புஷ்பம் பலம் தோயம் யோ மே பக்த்யா ப்ரயச்சதி' என்று சொல்கிறான் அல்லவா? 'இலையோ, பூவோ, பழமோ, நீரோ எதுவானாலும் என் பக்தன் எனக்கு அன்புடன் தருவதை நான் ஏற்றுக் கொள்கிறேன்' என்கிறான். அதனால் துளஸி இலைகளை முக்கியமாக நாம் பகவானுக்கு அர்ப்பணம் செய்கின்றோம். ஜயதேவர் 11வது அஷ்டபதியில் 'பததி பதத்ரே விசலதி பத்ரே...' என்று பாடுகிறார். இலை அசைந்தால் கூட கண்ணன் ராதை வருகிறாளோ என்று எதிர்பார்த்து அந்த திசையில் பார்க்கிறான்

என்கிறார். 'வடபத்ரஸாயீ' என்ற கண்ணனின் பெயர் நமக்கு நன்கு தெரியும். 'வட' வ்ருக்ஷம் என சொல்லப்படும் ஆலமரத்தின் இலையில் குழந்தையாக படுத்துக்கொண்டிருப்பதால் (ஸாயீ) 'வடபத்ரஸாயீ' என்ற பெயர் வந்துவிட்டது கண்ணனுக்கு.

'வடஸ்ய பத்ரஸ்ய புடே ஸயானம்
பாலம் முகுந்தம் மனஸா ஸ்மராமி'

என்று பாலமுகுந்தாஷ்டகத்தில் வருகிறது. மேலும், ஸ்ரீமத் பாகவதத்தில் நரக வர்ணனையில் 'அஸிபத்ரவனம்' என்ற ஒரு நரகம் சொல்லப் பட்டுள்ளது. 'அஸி' என்றால் 'கத்தி' என்று அர்த்தம். அந்த நரகத்தில் உள்ள வனத்தில், மரங்களின் இலைகள் கத்தியைப் போல் கூர்மையாக இருக்குமாம். அந்த வனம் வழியாக இழுத்து செல்லும்பொழுது அந்த இலைகள் குத்துவதால் அந்த ஜீவனுக்கு வேதனை ஏற்படும்.

'பத்ர' என்றால் இறகு என்று ஒரு அர்த்தம். 'பத்ரரத' என்றால் பக்ஷி என்று அர்த்தம். ஏனென்றால், அது தனது இறகுகளைக் கொண்டு இங்கும் அங்கும் செல்வதால், 'பத்ரரத', 'பத்ரவாஹ' என்றெல்லாம் அழைக்கப்படுகிறது. ஸ்ரீமத் பாகவதத்தில் 3வது ஸ்கந்தத்தில், கர்தம ப்ரஜாபதி தவம் செய்தபொழுது, பகவான் தரிசனம் கொடுக்கிறார். பகவான் கிளம்பும்பொழுது எப்படி சென்றான் என்று கூறும்பொழுது, பாகவதம் கூறுகிறது - "ஆகர்ணயன் பத்ரரதேந்த்ரபக்ஷை: உச்சாரிதம் ஸ்தோமம் உதீர்ணஸாம" அதாவது, பகவான் எந்த கருடன் மீது ஏறி செல்கின்றாரோ, அந்த பக்ஷிராஜனான (பத்ரரதேந்த்ர) கருடனின் இறகுகள் வீசும்பொழுது ஏற்படும் ஸாமவேதத்தின் மந்திரங்களைக் கேட்டுக்கொண்டே தனது வைகுண்ட லோகத்திற்கு சென்றார் என்கின்றது.

'பத்ர' என்றால் இதழ் என்றும் பொருள். ஸ்ரீ க்ருஷ்ணனை பற்றி பாகவதத்தில் பலமுறை 'க்ருஷ்ண: கமலபத்ராக்ஷ:' என்று வரும். தாமரை இதழ் போன்ற சிவந்த கண்கள் உடையதால் கமலபத்ராக்ஷ: எனப்படுகிறான். மேலும் 'ஸதபத்ர' என்றால் நூறு இதழ்கள் கொண்ட தாமரை என்று அர்த்தம்.

கடைசியாக, 'பத்ர' என்ற சப்தத்திற்கு உடம்பிலோ அல்லது முகத்திலோ ஸுகந்தமான தாதுக்களால் சித்திரம் வரைந்து கொள்வது என்றும் ஒரு அர்த்தம். 'பத்ரபங்க' அல்லது 'பத்ரலேகனம்' என்று அதன் பெயர். கீதகோவிந்தத்தில் ராதை கடைசி அஷ்டபதியில் கண்ணனிடம் தனக்கு ச்ருங்காரம் செய்துவிட சொல்கிறாள். அதில் 'ரசய குசயோ: பத்ரம்' என்று இந்த விதமாக அழகான கோலங்கள் (designs) வரையும்படி கேட்கிறாள். இதைத் தான் இன்று நாம் TATTOO என்று கூறுகிறோம்.

# செய்நன்றியறிதலே உய்யும் வழி

**காலை எழுந்ததும் நன்றியை உணர்தல்**

தினமும் காலை எழுந்ததுமே குறைந்த பட்சம் ஒரு நிமிடமாவது எடுத்துக்கொண்டு, இதுவரை உங்கள் வாழ்வில் நிகழ்ந்த நற்செயல்களுக்குக் காரணமானவர்களை நினைத்து மானசீகமாக அவர்களுக்கு உங்கள் நன்றிகளைத் தெரிவியுங்கள். இது, அன்றைய நாளை சரியாகத் துவங்குவதற்கான வழியாகும்.

**நன்றி தெரிவிக்க வேண்டியவர்களின் பெயர்களைப் பட்டியலிட்டு வைத்துக் கொள்ளுங்கள்**

மிகவும் மன அழுத்தம் நிரம்பிய நாளாக இருந்தாலும் சரி, மிக நெருங்கியவர்களின் இழப்பிலும் சரி, அல்லது மிகவும் சோர்வாக உணரும் நேரங்களிலும் கூட நம்மை உற்சாகப்படுத்தும் மருந்தாக இந்தப் பட்டியல் உதவக் கூடும். நமது உடல் ஆரோக்கியத்திற்காகவும், அன்பானவர்கள் நம்மைச் சுற்றி இருப்பதற்காகவும், ஒரு நல்ல பணியில் நாம் ஈடுபட்டிருப்பதற்காகவும், பாதுகாப்பான வீட்டில் வாழ்வதற்காகவும், எல்லாவற்றுக்கும் மேலாக உயிரோடு வாழ்வதற்காகவும், இதையெல்லாம் நாம் உணர்வதற்காகவும் கூட, நாம் ஒவ்வொருவரும் நம் வாழ்வில் யாருக்கேனும் நன்றி சொல்ல நிச்சயம் கடமைப்பட்டிருப்போம்.

> ஒரு சிறிய நற்செயல் எவ்வளவு எளிதாகவும், சுலபமாகவும் வாழ்வினை வளமைடையச் செய்கிறதென்பதை நினைக்கும்போது மிகவும் ஆச்சர்யமாக உள்ளது. நன்றியை வெளிப்படுத்துவதும், செய்நன்றி மறவாமல் இருப்பதும் மிகவும் உன்னதமான விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அவை நமது வாழ்வை மிகவும் ஆழமான முறையில் மாற்றியமைக்கும் சக்தி கொண்டவை.

**கோபத்திற்கு பதில் நன்றியுணர்வு**

உணர்வை மாற்றிக்கொள்வது அவ்வளவு எளிதல்ல. உதாரணத்திற்கு நீங்கள் உங்கள் சக பணியாளர் மீதோ அல்லது வாழ்க்கைத்துணையின் மீதோ அவர்களது மாறுபட்ட கருத்திற்காகக் கோபம் கொண்டுள்ளீர்கள் என்றால், கோபத்தை வெளிப்படுத்துவதற்கு முன்பாக ஒரு நீண்ட பெருமூச்சு விடுங்கள். ஒரு கணம், உங்களை அமைதிப்படுத்திக்கொண்டு, அவர்

கோபத்திற்கு பதில் நன்றியுணர்வு உங்களுக்குச் செய்த ஏதோ ஒரு நன்மையை நினைத்துப் பாருங்கள். அது, உங்களை மகிழ்வித்த தருணம் அல்லவா? மிகவும் கடினம் தான் என்றாலும் சிறிது பழக்கப் படுத்திக்கொண்டு இவ்வாறு செய்ய ஆரம்பித்தீர்களானால் அது கொஞ்சம் கொஞ்சமாக உங்களது கோபத்தைக் குறைத்துவிடும்.

**குழந்தைகளின் மீது புகார் சொல்ல வேண்டாம், மாறாக நன்றி சொல்லுங்கள்**

அனேகமாக பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை நினைத்து மிகுந்த மன அழுத்தத்தோடு காணப்படுகிறார்கள். குழந்தைகள் தங்கள் வேலைகளை மெதுவாகச் செய்கிறார்கள், சோம்பேறித்தனமாக நேரத்தை ஓட்டுகிறார்கள், தங்கள் உடைமைகளை சீராகவும், சுத்தமாகவும் பராமரிக்கத் தவறுகிறார்கள், தீய எண்ணங்களில் விழுந்துவிடுகிறார்கள் என்று பல புகார்கள். துரதிர்ஷ்டவசமாக அதை அவர்கள் தங்கள் குழந்தைகளிடமே பகிர்ந்து கொள்ளவும் செய்கிறார்கள். அதனால், குழந்தைகள் தங்களைப் பற்றிய தாழ்வு மனப்பான்மையை வளர்த்துக் கொள்கின்றனர். குழந்தைகளுக்கு அவர்கள் செய்யும் சிறியதொரு நற்செயலுக்கும் கூட நன்றி சொல்லுங்கள். அவர்களைக் குற்றம் சொல்வதற்கு பதிலாக, எப்படி சரியாகச் செய்யவேண்டும் என்று சொல்லிக்கொடுங்கள்.

**நீங்கள் சந்திக்கும் ஒவ்வொரு பெரிய பிரச்சனைக்கும் நன்றி சொல்லுங்கள்**

நீங்கள் பெரியதொரு பிரச்சனையை சந்திக்க நேரிட்டால் அதைப்பற்றி பிறரிடம் அங்கலாய்ப்பதை விட்டு விட்டு மாறாக, அதற்காக நன்றி சொல்லுங்கள். பிறரிடம் சொல்லிப் புலம்பிக்கொண்டிருப்பதால் உங்களுக்கு நிச்சயம் தீர்வு கிடைக்கப் போவதில்லை. பிறகு புலம்புவதால் ஆவதென்ன? நீங்கள் நினைப்பதற்கு மாறாக, பிரச்சனைகள், உங்கள் தகுதியை அடுத்த கட்டத்திற்கு உயர்த்திக்கொள்ள அது உதவி செய்கின்றன. எனவே, அதற்காக நன்றி கூறுங்கள். இது உங்களை நேர்வழி சிந்தனையாளராக மாற்றுவதோடு நீங்கள் வளர்வதற்கும் உதவி செய்கிறது. சக மனிதர்களும் உங்களை விரும்புவதோடு உங்கள் வளர்ச்சிக்கும் உதவி செய்வர்.

**பெரும் சோகம் வருமானால், நீங்கள் வாழும் வாழ்க்கைக்கு நன்றி சொல்லுங்கள்**

சமீபத்தில் உங்கள் நெருங்கிய நண்பரையோ உறவினரையோ இழந்திருக்கக் கூடும். சோகம் உங்களை முழுவதுமாக முடக்கிவிடும் திறன் கொண்டது. தற்போது அனுபவிக்கும் சோகத்தைவிட பன்மடங்கு பெரிய சோகம் உங்களைத் தாக்காமல் இருப்பதற்கு நன்றி சொல்லுங்கள்.

வாழும் வாழ்க்கைக்காக நன்றி தெரிவிப்பது அவசியம். இன்னும் உங்களைச் சுற்றி, உங்கள் மேல் அன்பு செலுத்துபவர்களும் உங்கள் நலன் விரும்பிகளும் இருப்பதற்காக நன்றி சொல்லுங்கள். அவர்களுக்கு இத்தருணத்தில் நன்றி சொல்வதற்காக மகிழ்ச்சி கொள்ளுங்கள்.

**உங்களிடம் இல்லாதவற்றை நினைத்துக் கொண்டிருப்பதைக் காட்டிலும், உங்களிடம் இருப்பதை சரியாக கவனியுங்கள்**

உங்களைச் சுற்றி எப்போதாவது கவனம் செலுத்தியதுண்டா? இந்தப் பிரபஞ்சத்தில் நீங்கள் எவ்வளவு சிறிய உயிரினம் என்று உற்று நோக்கியதுண்டா? உங்கள் வீடு, வாகனம் இவை அனைத்துமே நீங்கள் நினைத்ததுபோல் அமையாமல் இருக்கலாம். ஆனால், தற்போது நீங்கள் அனுபவிப்பதெல்லாம் என்ன? அவற்றிற்காக நன்றி சொல்ல வேண்டாமா? எவ்வளவோ மக்கள் இதுகூட இல்லாமல் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார்களே? தங்குவதற்கு வீடு, உடை, உண்ண உணவு இன்றி இருக்கிறார்கள். சொந்தமாக கார் இல்லாமல், ஏன்? அதை வாங்குவதற்கு வாய்ப்பு கூட இல்லாமல், வேலை இல்லாமல், வேலை நிரந்தரம் இல்லாமல், அல்லது ஆபத்தான வேலை இவற்றால் துன்பப் படுபவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்களே. உங்கள் வாழ்க்கையை நீங்கள் அவர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் நீங்கள் தேவைக்கு அதிகமாகவே அனுபவித்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பது புரிய வரும். மகிழ்ச்சி என்பது அடையவேண்டிய ஒன்றல்ல. அது, எப்போதும் உங்களுடனேயே இருப்பதாகும்.

**நமக்கு மனிதப்பிறவி அளித்ததற்காகவும், ஒரு ஸத்குருவிடம் நம்மைக் கொண்டு சேர்த்ததற்காகவும், நாமத்தையும் ஸத்ஸங்கத்தையும் அருளியதற்காகவும் எண்ணற்ற நன்றிகளை இறைவனுக்குத் தெரிவியுங்கள்.**


Dr. Shriraam Mahadevan
MD (Int Med), DM (Endocrinology)
Consultant in Endocrinology and Diabetes, Regn No. 62256
ENDOCRINE AND SPECIALITY CLINIC
New 27/1, Old 11/1, (Gr. Floor),
4th Cross Street, RK Nagar,
Mandaveli, Chennai -600028
(Next to Krishnamachari Yogamandiram)
Tel: 2495 0090, Mob: 9445880090
E-mail: mshriraam@gmaill.com, www.chennaiendocrine.com

## உலோகவியல்

கங்கை சமவெளி நாகரிகத்தைப் பற்றிய அகழ்வாராய்ச்சியை மேற்கொண்ட ராகேஷ் திவாரி என்பவர், இந்தியாவில் இரும்பின் பயன்பாடு என்பது கி.மு.1800ஆம் ஆண்டுகளிலேயே இருந்ததாகக் குறிப்பிடுகின்றார். அந்த காலகட்டத்தில் இத்துறையில் அவர்கள் மேற்கொண்ட வளர்ச்சியானது அதிசயக்கத்தக்கது! 7 மீட்டர் உயரம் கொண்ட டெல்லியில் உள்ள இரும்புத் தூணானது உலோகக் கலவையால் செய்யப்பட்ட ஒரு படைப்பிற்கு முக்கியச் சான்றாக விளங்குகின்றது. அந்தத்தூண், 98 சதவீதம் இரும்பைக் கொண்டுள்ளது. இது, அக்காலத்து இந்திய இரும்புக் கொல்லர்களின் திறனுக்கு முக்கியச் சான்றாக விளங்குகின்றது. மேலும், அகழ்வாராய்ச்சி செய்பவர்கள் மற்றும் உலோகவியலாளர்களின் கவனத்தையும் அது கவர்ந்து இழுக்கின்றது. சுமார், 1600 ஆண்டுகளுக்கும் மேலாகத் திறந்தவெளியில் உலோக அரிப்பைத்தாண்டி இன்றும் கம்பீரமாக இருக்கின்றது.

## கண்ணாடி

கண்ணாடி என்பது பல பொருட்களின் கலவையாகும். அது மண், சுண்ணாம்பு, காரத்தன்மை (alkali) கொண்ட பொருட்கள் மற்றும் உலோக ஆக்சைடுகள் ஆகியவற்றாலான ஒரு கலவை ஆகும். அது, ஒளி ஊடுருவும் தன்மையுடையது, ஒளி ஊடுருவும் தன்மை இல்லாதது, வண்ணம் உள்ளது மற்றும் வண்ணம் இல்லாதது என்று பல வகைப்படும். சிந்து சமவெளி நாகரிகத்தில் கண்ணாடி இருந்ததற்கான எந்த ஒரு அடையாளமும் இல்லை. ஆனால், ஒருசில மெருகேற்றப்பட்ட பொருட்கள்

ஸ்ரீ பாலாஜி ராமசந்திரன்

பகுதி 2

# இரசாயன மற்றும் வேதியியல் துறைகளில் பண்டைய இந்தியா



# பாரம்பரிய பொக்கிஷங்கள்

**காணக்கிடைக்கின்றது. இவ்வகையான பொருட்கள் கர்நாடகாவில் உள்ள மஸ்கி, ஹஸ்தினாபுரம் மற்றும் பாகிஸ்தானின் பஞ்சாபிலுள்ள டாக்ஸிலா ஆகியப் பகுதிகளில் பல காணக்கிடைக்கின்றன. அவை, உலோக ஆக்சைடுகள் துணை கொண்டு வர்ணமேற்றப்படுகின்றன. ராமாயணம், ப்ரஹத் சம்ஹிதா, கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம் மற்றும் சுக்ரநிதிசார ஆகிய படைப்புகளில் கண்ணாடியின் பயன்பாட்டிற்கான குறிப்புகள் காணக்கிடைக்கின்றன. பண்டைய இந்தியாவில், கண்ணாடி தயாரிப்பானது அனைத்துப் பகுதிகளிலும் இருந்ததோடு மட்டுமல்லாமல் அந்தக் கலையில் மிக நுண்ணிய அறிவு பெற்றிருந்ததற்கான பல வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.**

### காகிதம்

**சீனப் பயணியான இஜிங் (Yijing) மூலமாக கி.பி.7வது நூற்றாண்டில் காகிதமானது இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டது. தொடக்ககாலங்களில் காகிதத்தயாரிப்பு முறையானது சுலபமாகவும் இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலும் ஒரே மாதிரியாகவும் இருந்தது. பண்டைய இந்தியாவில் காகிதமானது சியல்கோட், ஸபர்பாத், முர்ஷிதாபாத், அகமதாபாத் மற்றும் மைசூர் ஆகிய பகுதிகளில் பெரும்பாலும் தயாரிக்கப்பெற்றது.** 

**(தொடரும்)**


## FORM IV

Statement about ownership and other particulars about newspaper MADHURAMURALI
(to be published in the first issue every year after the last day of February)

1. Place of publication: - 2/24, Nethaji Nagar, Jafferkhanpet, chennai 600083. Tamilnadu
2. Periodicity of its publication: - monthly
3. Printer's Name : - M/s. Rajthilak Printers (P) Ltd., Sivakasi. Nationality : Indian
4. Publisher's Name : - S. Srinivasan Nationality : Indian
5. Editor's Name : - S. Sridhar Nationality : Indian
6. Names and addresses of individuals who own the newspaper and partners or shareholders holding more than one per cent of the total capital : Guruji Sri Muralidhara Swamigal Mission, Chennai - 83


I, S.Srinivasan, Publisher hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date 1st March 2017

sd/- S.Srinivasan (Signature of Publisher)

# சைதன்ய மஹாப்ரபு -7
# குழந்தை நிமாயீயின் பால லீலை





விஸ்வரூபன் நிமாயியை அடுத்த அறைக்கு அழைத்துச் சென்றான். ஒரு புறம் நிமாயீ விளையாட ஆரம்பித்ததும் விஸ்வரூபன் தன் பாடத்தில் ஆழ்ந்துவிட்டான்.
ராம: ராமா:
சமையல் செய்து முடித்தவுடன் சசி மாதா தன் குழந்தைகளைத் தேடி வந்தார்.
விஸ்வரூபா! சாப்பிட வா!
நிமாயீ எங்கே? உன்னுடன் விளையாடிக் கொண்டு இருந்தான் அல்லவா?
வீடு முழுவதும் தேடியும் நிமாயீயை காணவில்லை.
நிமாயீ! நிமாயீ!
நிமாயீ .. எங்கிருக்கிறாய்???
இறுதியில் பின்புற தோட்டத்தில் நிமாயியை ஒரு நாகப் பாம்புடன் விளையாடுவதைக் கண்டு அதிர்ச்சி அடைந்தார்கள் .
அஹோ!! இங்கு என்ன நடக்கின்றது?
அக்காட்சியைக் காண முடியாமல் சசி மாதா மூர்ச்சையானார். மயக்கம் தெளிந்தவுடன் , பாம்பைக் காணவில்லை மற்றும் நிமாயீ குறும்பு சிரிப்புடன் நிற்பதைக் கண்டார்.
நிமாயீ! கண்டது என்ன நிஜமா? அத்வைத்தாசாரியாரின் கூற்று உண்மையானதோ ?
இச்சம்பவத்தின் மூலம், உலகத்திற்குத் தான் அவதார புருஷன் என்பதைக் காண்பித்தாரோ ?
நிமாய்யின் பால் லீலைகள் தொடரும்...


ஓவியர் : பாலமுரளி

# புராநவா



**இந்த சிற்பத்தில் ஸ்ரீ விஷ்ணுவின் எந்த அவதாரம் காணப்படுகிறது?**

<u>சென்ற மாத புராநவா பதில்</u> — Rani ki Vav, Gujarat

**ஸனாதன புதிர் 94 - பதில்கள்**

1. பாசுபதாஸ்திரம்.
2. தந்தை - பாணாசுரன்; தாய் - லோஹானி.
3. குருபக்தியில்; தந்தை வ்யாக்ரபாதர் - தாய் அம்பா. ஸ்ரீக்ருஷ்ணருக்கு சிவ சஹஸ்ர நாமத்தை உபதேசித்தவர்.
4. தேவலோகத்து அப்ஸரஸ். கணவன் புரூரவா; புதல்வர்கள் ஆர்யு, விஜயன். விபாண்டகர் மூலம் ரிஷ்யசிருங்கர். மித்ரவருணன் மூலம் வசிஷ்டர் / அகஸ்தியர்.
5. விஸ்வாமித்ரர் ஜமதக்னியிடம் இருந்து, சம்சர்பரி வித்யா கற்று வசிஷ்டரின் புதல்வரான சக்தியை சாம்பலாக்கினார்.
6. புஷ்போத்கடா, கௌ, மாலினி, ராகா.
7. தந்தை விஸ்ரவா - தாய் கௌ.
8. தந்தை விஸ்ரவா - தாய் புஷ்போத்கடா.
9. தந்தை விஸ்ரவா - தாய் மாலினி.
10. தந்தை விஸ்ரவா - தாய் ராகா.

# படித்ததில் பிடித்தது

**(செய்தித்தாள்களிலும் பத்திரிக்கைகளிலும் வந்த சுவாரஸ்யமான செய்திகளின் தொகுப்பு)**

---

## Howzat! Cricket in Dhoti-kurta, commentary in Sanskrit

Times of India
4 February 2017



**சமஸ்க்ருதத்தில் ஒரு வர்ணனை, "ஏதே க்ரிகிட: சற்ற: தண்டசாலனார்த்தம் ஆகமிஷ்யந்தி (பந்தை அடிப்பதற்காக விளையாட்டு வீரர் வருகிறார்) ஏதே சாத்ர: கந்துக் க்ரீடனார்த்தம் ஆகமிஷயந்தி (இன்னொரு வீரர் பந்தை வீச வருகிறார்) சதுர்தங்க லப்த: (நான்கு ரன்கள் எடுக்கப்பட்டன)", வாரணாசியிலுள்ள ஸம்பூர்ணானந்த் சமஸ்க்ருத பல்கலைக்கழக விளையாட்டு மைதானத்தின் ஒலி பெருக்கியினின்று ஒலித்துக் கொண்டிருந்தது. அருகே சென்று பார்க்கும்போது, இள வயதுடைய மாணவர்கள், இளமஞ்சள் நிற வேஷ்டியும் ஆரஞ்சு நிற குர்தாவும் அணிந்து ஓட்டங்களை (runs) எடுத்துக் கொண்டிருந்தனர்.**

**சமஸ்க்ருத வல்லுனர்கள் வேஷ்டியும் குர்தாவும் அணிந்து, கிரிக்கெட் பிட்சில் நின்றுகொண்டு, டாஸ் போட்ட பின்னர் கிரிக்கெட் விளையாட்டானது துவங்கிய காட்சியானது, பார்வையாளர்களுக்கு கிரிக்கெட்டின் ஒரு புதிய பரிமாணத்தை எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தது. வர்ணனையும் சமஸ்க்ருதத்திலேயே அமைந்திருந்தது.**

**வசந்த பஞ்சமியன்று கொண்டாடப்படும் 73வது ஆண்டு விழாவை ஒட்டி, சாஸ்ரார்த் மகாவித்யாலயாவினால், சமஸ்க்ருத கல்லூரி மாணவர்களுக்கான மாவட்ட அளவிலான கிரிக்கெட் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.**

# Sanskrit verses on hospital walls in Rajasthan

Economic Times
6 February 2017

**சுகாதாரம் மற்றும் ஆயுர்வேத அமைச்சரான காளிசரண் ஷரஃப், "வேதம், புராணம், ஸ்ம்ருதி, ராமாயணம் மற்றும் மகாபாரதம் ஆகியவைகளிருந்து சமஸ்க்ருத ஸ்லோகங்கள் ஹிந்தியில் மொழி பெயர்க்கப்பட்டு ராஜஸ்தான் மாநிலத்தில் 17,000க்கும் மேற்பட்ட மருத்துவமனைகளின் சுவர்களில் எழுதப்படவுள்ளது" என்ற அறிவிப்பை வெளியிட்டார். இவற்றில், பல்வேறு மருத்துவ முறைகளான அலோபதி, ஹோமியோபதி, ஆயுர்வேதம் ஆகியவற்றை சேர்ந்த அனைத்து சமூக சுகாதார மையங்கள், மாநில அளவிலான மருத்துவமனைகள் ஆகியன அடங்கும்.**

**ராஜஸ்தான் சமஸ்க்ருத அகாடமியில் 26 ஸ்லோகங்களை திரு. ஷரஃப் வெளியிட்டார். இந்த ஸ்லோகங்கள் மனச் சோர்வு நீக்குபவை, பிரார்த்தனை மற்றும் நேர்வழியில் மனதைத் தூண்டுபவை என மூன்று வகையாக வகைப்படுத்தப் பட்டுள்ளன. புனித நூல்களிலிருந்து 150 ஸ்லோகங்கள் விரைவில் தேர்ந்தெடுக்கப்படவுள்ளன. மருத்துவமனைகளின் ஒவ்வொரு பிரிவிலும் வெவ்வேறு வகையான ஸ்லோகங்கள் எழுதப்படும். தற்போது மூன்று பிரிவுகளுக்கான ஸ்லோகங்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளன.**

**"ஸர்வே பவந்து ஸுகின:, ஸர்வே ஸந்து நிராமயா" (எல்லோரும் ஆரோக்கியமாகவும் மகிழ்வோடும் இருக்கவேண்டும்) என்பவை வெளி நோயாளிகள் பிரிவிலும், "ஸ்வஸ்த்ய ஸ்வஸ்த ரக்ஷணம்" (இறைவா, ஒவ்வொருவரும் ஆரோக்கியமாகவும் மகிழ்ச்சியோடும் வாழ அருள்செய்) என்பது அறுவை சிகிச்சை மையத்திலும், "ஆசார: பரமோ தர்ம:" (பழக்கவழக்கங்களே நம்மை உயர்த்தும்) என்பது பிரசவ அறைகளிலும் எழுதப்படவுள்ளன. சரக மகரிஷியின் வாக்கியமான "ஜீர்ணே அஷ்நியத்" (முற்பொழுதில் உண்ட உணவு செரித்த பின்பே அடுத்தவேளை உணவை உண்ணவேண்டும்), ஆயுர்வேத வல்லுனரான வாக்பட்டின் வாக்கியமான "போஜனாந்தே ஷதம் கச்சேத்" (உணவு உட்கொண்ட பின்னர் 100 அடிகள் நடக்க வேண்டும்), "பிந்து தரண் மோக்ஷ:" (ஆரோக்கியமான வாழ்வின் சாவி, ப்ரம்மச்சர்யம்) ஆகிய சொற்றொடர்களும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.**

மதுரமுரளி


- Publisher : S. Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission


- Copyright of articles published in Madhuramurali is reserved. No part of this magazine may be reproduced, reprinted or utilised in any form without permission in writing from the publisher of Madhuramurali.
- Views expressed in articles are those of the respective Authors and do not reflect the views of the Magazine.
- Advertisements in Madhuramurali are invited.


| சத்சங்க நிகழ்ச்சிகள் | |
|---|---|
| 08 மார்ச் 2017 | ஏகாதசி |
| 12 மார்ச் 2017 | ஸ்ரீ சைதன்ய மஹாப்ரபு ஜெயந்தி |
| 13-19 மார்ச் 2017 | ஸ்ரீமத் பாகவத சப்தாஹம், அம்பாசமுத்ரம் |
| 24 மார்ச் 2017 | ஏகாதசி |

## அறிவிப்பு

அனைத்து வாசகர்களும், தங்களது தொலைபேசி எண்ணை, தங்களது சந்தா எண்ணுடன் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Email:helpdesk@madhuramurali.org, Ph: "24895875"

## ஸ்ரீ ஸ்வாமிஜி அவர்களுக்கு தெரிவிக்க வேண்டிய விஷயங்களை அனுப்பவேண்டிய முகவரி


Dr.A.BHAGYANATHAN, Personal Secretary to
HIS HOLINESS SRI SRI MURALIDHARA SWAMIJI
Plot No11, Door No 4/11, Netaji Nagar Main Road,
Jafferkhanpet, Chennai - 83.
Tel. : +9144-2489 5875, Email : contact@namadwaar.org



நாரத கான சபா, சென்னை, 20 Feb 2017

Registered with The Registrar of Newspapers for India
R.No 62828/95
Regd. No. TN/CC(S)DN/119/15-17

Date of Publication: 1st of every month
Date of Posting: 5th and 6th of every month
Licensed to post without prepayment
WPP No. TN/PMG(CCR)WPP—608/15-17



Published by S.Srinivasan on behalf of Guruji Sri Muralidhara Swamigal Mission, New No2, Old No 24, Netaji Nagar, Jafferkhanpet, Chennai – 83 and Printed by Mr R. Kumaravel of Raj Thilak Printers (P) Ltd, 1/545A. Sivakasi Co-op Society Industrial Estate, Sivakasi. Editor: S.Sridhar